*These conclusions led me to recognize in the prayers of ancient peoples the seed of a great truth, a truth later obscured by external rites and practices, making it impossible for them to develop that internal work which, realized with perfection, puts human beings in contact with their luminous source. Finally, I observed that my “discoveries” were not discoveries at all, but arose from the inner revelation at which all arrive who, without contradictions, search for the light in their own hearts.*





4. இந்த சக்தியை உண்மையான விழிப்பு நிலைக்கு வழிநடத்தலாம் (“சக்தி” மூலம் ஒரு குறிப்பிட்ட வடிவத்தின் மன ஆற்றலையும், “புள்ளியின்” மூலம் இந்த வடிவத்தின் துல்லியமான அமைவிடத்தையும் புரிந்துகொள்ளலாம).

*பண்டையகால மக்களின் பிரார்த்தனைகளில் ஒரு மாபெரும் சத்தியத்தின் வித்துகளை அடையாளம் காண இந்த முடிவுகள் என்னை வழிநடத்தின இந்த சத்தியமானது வெளிப்புற சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களால் மறைந்து போனது, இதனால் மனிதனை ஒளி ஆதாரத்துடன் தொடர்புகொள்ள வைக்கும் உள்ளார்ந்த செயல்முறைகளை மேம்படுத்துவது சாத்தியமற்று போனது. இறுதியாக, எனது “கண்டுபிடிப்புகள்” கண்டுபிடிப்புகளே அல்ல என்பதை நான் கண்டறிந்தேன், ஆனால் இது முரண்பாடு இல்லாமல் தங்கள் இதயத்திலிருந்து ஒளியைத் தேடுபவர்களின் உள்வெளிப்பாட்டிலிருந்து வெளிவந்தவையாகும்.*

# XIII. THE PRINCIPLES

*Different is the attitude toward life and things when inner revelation strikes like lightning.*

*Following the steps slowly, meditating on what has been said and what has yet to be said, you may convert the non-meaning into meaning. It is not indifferent what you do with your life. Your life, subject to laws, is open to possibilities among which you can choose. I do not speak to you of liberty. I speak to you of liberation, of movement, of process. I do not speak to you of liberty as something static, but of liberating yourself step-by-step, as those who approach their city become liberated from the road already traveled. Thus, "what one must do" depends not upon distant, incomprehensible, and conventional morals, but upon laws: laws of life, of light, of evolution.*





# XIII. கோட்பாடுகள்

*உள்ளார்ந்த வெளிப்பாடு மின்னல் போல தாக்கும் போது வாழ்க்கை மற்றும் பொருள்கள் மீதான மனப்பான்மை வேறுபடும்.*

*படிப்படியாக இந்த வழியை பின்பற்றுவதினால், எது சொல்லப்பட்டதோ, எது சொல்லப்பட வேண்டுமோ அதை தியானித்து, அர்த்தமற்றதை அர்த்தமுடையதாக நீங்கள் மாற்றிக்கொள்ளலாம். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் செய்ய விரும்புவதிலிருந்து இது வேறுபட்டதல்ல. சட்டங்களுக்கு உட்பட்டு, உங்களது வாழ்க்கையில் வாய்ப்புகளை தேர்வுசெய்து கொள்ளலாம். நான் உங்களிடம் சுதந்திரத்தைக் குறித்து பேசவில்லை. நான் செயல்முறையின் இயக்கத்தினுடைய சுதந்திரம் பற்றி பேசுகிறேன். நான் நிலையான சுதந்திரம் பற்றி உங்களிடம் பேசவில்லை, எவ்வாறு ஒருவன் நகரத்திற்கு செல்லும்போது முன்னால் உள்ள பாதையிலிருந்து தன்னை விடுவித்து கொள்கிறானோ அதுபோல உங்களை நீங்களே படிப்படியாக விடுவித்துக் கொள்ள வேண்டும். எனவே "ஒருவன் என்ன செய்ய வேண்டும்" என்பது புரிதலுக்கு அப்பால் உள்ள இயல்பான ஒழுக்க நெறிகளை சார்ந்தது அல்ல ஆனால் வாழ்க்கை, ஒளி, பரிணாமங்களின் விதியை சார்ந்தது.*

*Here are the "Principles" which can help you in your search for internal unity:*

1. To go against the evolution of things is to go against yourself.
2. When you force something toward an end, you produce the contrary.
3. Do not oppose a great force. Retreat until it weakens, then advance with resolution.
4. Things are well when they move together, not in isolation.
5. If day and night, summer and winter are well with you, you have surpassed the contradictions.
6. If you pursue pleasure, you enchain yourself to suffering. But as long as you do not harm your health, enjoy without inhibition when the opportunity presents itself.





*உள்ளார்ந்த ஒற்றுமைக்கான உங்கள் தேடலில் உங்களுக்கு உதவக்கூடிய "கோட்பாடுகள்" இங்கே கூறப்பட்டுள்ளன:*

1. காரியங்களின் பரிணாமத்தை எதிர்ப்பது தன்னைத்தானே எதிர்ப்பதாகும்.
2. முடிவை நோக்கி ஒன்றை நீங்கள் கட்டாயப்படுத்தினால், அது எதிர்விளைவை தோற்றுவிக்கும்.
3. ஒரு பெரிய சக்தியை எதிர்க்க வேண்டாம். அதன் வீரியம் குறையும் வரை பின்வாங்கு, பின் உறுதியோடு முன்னேறு.
4. தனித்து இயக்குவதை விட, ஒருங்கிணைந்து இயங்கும் காரியமே நல்லது.
5. இரவு மற்றும் பகல், கோடை மற்றும் குளிர் உனக்கு ஏற்புடையதாக இருந்தால், நீ முரண்பாடுகளை கடப்பாய்.
6. நீ இன்பத்தை பின் தொடர்ந்தால், நீ உன்னையே துன்பத்தில் பிணைக்கிறாய். ஆனால் உன் நலனுக்கு கேடு விளைவிக்காத வகையில், வாய்ப்பு அமையும் போது மகிழ்ச்சியை தயங்காமல் அனுபவி.

7. If you pursue an end, you enchain yourself. If everything you do is realized as though it were an end in itself, you liberate yourself.

8. You will make your conflicts disappear when you understand them in their ultimate root, not when you want to resolve them.

9. When you harm others you remain enchained, but if you do not harm anyone you can freely do whatever you want.

10. When you treat others as you want them to treat you, you liberate yourself.

11. It does not matter in which faction events have placed you. What matters is that you comprehend that you have not chosen any faction.

12. Contradictory or unifying actions accumulate within you. If you repeat your acts of internal unity, nothing can detain you.





7. முடிவு ஒன்றை அடைவதற்காக பின்தொடர்ந்தால் நீ உன்னையே விலங்கிட்டு கொள்கிறாய். மாறாக முடிவை அடைய நீ எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் முடிவாக கருதிச் செயல்பட்டால் நீ உன்னையே விடுவித்துக் கொள்வாய்.

8. நீ முல ஆதாரங்களை புரிந்துகொள்ளும் போது தான் அப்பிரச்சனைகள் முடிவடையும், உன் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கும் போதல்ல.

9. நீ பிறரைத் துன்புறுத்தும் போது உன்னையே பிணைத்துகொள்கிறாய், மாறாக யாரையும் துன்புறுத்தாத போது, நீ சுதந்திரமாக எதை விரும்புகிறாயோ அதை செய்யலாம்.

10. பிறர் உன்னை எப்படி நடத்த வேண்டுமென விரும்புகிறாயோ அப்படியே நீ மற்றவரை நடத்தினால், நீ உன்னையே விடுவித்துக் கொள்வாய்.

11. நிகழ்வுகள் உன்னை எந்த பிரிவில் வைத்திருக்கிறது என்பது ஒரு பொருட்டே அல்ல. எந்த பிரிவும் நீ தேர்வு செய்ததல்ல என்று புரிந்து கொள்வதே உனக்கு முக்கியம்.

12. ஒருங்கிணைக்கும் அல்லது முரண்பட்ட செயல்கள் உனக்குள் குவிந்து கிடக்கும். ஆக அக ஒற்றுமையுடன் நீ தொடர்ந்து செயல்பட்டால், எதுவும் உன்னை தடுத்து நிறுத்த முடியாது.

*You will be like a force of Nature when it finds no resistance in its path. Learn to distinguish a difficulty, a problem, an obstacle, from a contradiction. While those may move you or spur you on, contradiction traps you in a closed circle with no way out.*

*Whenever you find great strength, joy, and kindness in your heart, or when you feel free and without contradictions, immediately be internally thankful. When you find yourself in opposite circumstances, ask with faith, and the gratitude you have accumulated will return to you transformed and amplified in benefit.*





*இயற்கையின் பாதையில் எந்த எதிர்ப்பும் இல்லாதபோது. நீங்கள் இயற்கையின் ஒரு ஆற்றலாக இருப்பீர்கள், ஒரு முரண்பாட்டில் இருந்து ஒரு தொய்வு, ஒரு பிரச்சனை, ஒரு தடையை வேறுபடுத்த கற்றுக்கொள்ளுங்கள். அவை உங்களை இயக்கும் போது அல்லது உங்களைத் தூண்டும் போது, முரண்பாடுகள் உங்களை வெளியே செல்ல முடியாத வட்டத்திற்குள் அடைத்து வைக்கிறது.*

*எப்பொழுதாகிலும் உங்கள் இருதயங்களில் மிகுந்த பலம், மகிழ்ச்சி மற்றும் இரக்கம் ஆகியவற்றை நீங்கள் காணும்போதெல்லாம் அல்லது நீங்கள் முரண்பாடு இல்லாமால் முழுநிறைவாக உணரும் போது, உடனடியாக உள்ளார்ந்த நன்றியை தெரிவியுங்கள். நீங்கள் எதிர்மறையான சூழ்நிலையில் இருக்கும் போது, நம்பிக்கையுடன் கேட்டால். நீங்கள் சேர்த்துவைத்திருக்கும் நன்றிக்கடன் மறு உருவெடுத்து உங்களை திருப்திபடுத்தி, பலனளிக்கிறது.*

# XIV. GUIDE TO THE INNER ROAD

*If you understand what I have explained so far, you can, through a simple exercise, readily experience the manifestation of the Force. It is not the same, however, to search for the correct mental position (as if this were a question of approaching a technical task) as it is to enter the kind of emotional tone and openness that poetry inspires. The language used to transmit these truths, then, is intended to facilitate an attitude that makes it easier to be in the presence of internal perception, rather than in the presence of an idea of "internal perception."*

*Now follow attentively what I will explain to you, because it concerns the inner landscape you may encounter when working with the Force, and the directions you can imprint on your mental movements.*





# XIV. அகத்திறவு சாலைக்கான வழிக்காட்டி

*நான் இதுவரை எதை விவரித்தேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால், ஒரு எளிமையான பயிற்சியின் மூலம் நீங்கள் சக்தியின் வெளிப்பாட்டை உடனடியாக உணரலாம். இருப்பினும், இது சரியான மனநிலைக்கான தேடலைப் போன்றது அல்ல (இது ஒரு நுட்பமான வேலையை அணுகுவது குறித்த ஒரு கேள்வி போன்றது), ஏனெனில் இது கவிதை வெளிப்படுத்தும் உணர்ச்சி பெருக்கு, வெளிப்படைத்தன்மையை இரசிப்பது போன்றது ஆகும். "உள்ளார்ந்த உணர்வு" குறித்த ஒரு எண்ணத்தில் இருப்பதை விட உள்ளார்ந்த உணர்வில் இருப்பது எளிது என்ற ஒரு மனநிலையை உருவாக்க உதவும், உண்மைகளை பரப்புவதே இந்த மொழியின் நோக்கமாகும்.*

*இப்போது நான் உங்களுக்கு விளக்குவதை கவனமாக கேளுங்கள், ஏனென்றால் அது நீங்கள் சக்தியுடன் செயல்படும் போது எதிர்படும் அகசொரூபம் மற்றும் மன எழுச்சிகளில் பதியக்கூடிய வழிக்காட்டுதல்களுடன் தொடர்புடையது.*

*“On the inner road you may walk darkened or luminous. Attend to the two roads that open before you.*

*If you let your being cast itself toward dark regions, your body wins the battle and it dominates. Then, sensations and appearances of spirits, of forces, of memories will arise. On this road you descend further and further. Here dwell Hatred, Vengeance, Strangeness, Possession, Jealousy, and the Desire to Remain. Should you descend even further you will be invaded by Frustration, Resentment, and all those dreams and desires that have brought ruin and death upon humanity.*

*If you impel your being in a luminous direction, you will find resistance and fatigue at every step. There are things to blame for this fatigue in the ascent. Your life weighs; your memories weigh; your previous actions impede the ascent. The climb is made difficult by the action of your body, which tends to dominate.*





*“அகத்திறவுக்கான சாலையில் நீங்கள் இருளிலோ அல்லது ஒளியிலோ நடக்கலாம். உங்களுக்கு முன்பாக திறந்துள்ள இரண்டு சாலைகளுக்கும் செல்லவும்.*

*நீங்கள் இருண்ட பகுதியை நோக்கி சென்றால் உங்களது உடல் அந்த பயத்தை வென்று ஆதிக்கம் செலுத்தும். பிறகு, ஆவி, சக்தி, நினைவுகளின் உணர்வு மற்றும் தோற்றம் எழும். இவ்வழியில், நீங்கள் மேலும் மேலும் கீழேநோக்கி பயணிப்பீர்கள். இங்குதான் வெறுப்பு, பழிவாங்கல், அந்நியம், ஆட்கொள்ளல், பொறாமை, ஆகியவற்றின் மீது பற்று ஆகியவை காணப்படும். நீங்கள் மேலும் கீழ் நோக்கி செல்லும்போது, ஏமாற்றம், மனக்கசப்பு மற்றும் மனிதகுலத்திற்கு அழிவையும் மரணத்தையும் கொண்டுவரும் கனவுகளும் ஆசைகளும் உங்களுக்கு வரும்.*

*ஒரு ஒளிமயமான திசையில் நீங்கள் பயணிக்க முயற்சிக்கும் போது, நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் எதிர்ப்பையும் சோர்வையும் காண்பீர்கள். மேல் நோக்கிச் செல்லும் போது ஏற்படும் சோர்வுகளுக்கு காரணங்கள் உள்ளது. உங்களது வாழ்க்கையும் பாரமாகின்றன. நினைவுகளும் பாரமாகின்றன முந்தைய செயல்களும், மேல் நோக்கி செல்வதில் தடையை ஏற்படுத்துகின்றன. உங்கள் உடலின் இயக்கம் மேல் நோக்கி செல்வதை கடினமாக்குகிறது.*

*In the steps of the ascent you will find strange regions of pure colors and unknown sounds.*

*Do not flee purification, which acts like fire and horrifies with its phantoms.*

*Reject startling fears and disheartenment.*

*Reject the desire to flee toward low and dark regions.*

*Reject the attachment to memories.*

*Remain in internal liberty, indifferent toward the dream of the landscape, with resolution in the ascent.*

*The pure light dawns in the summits of the great mountain chains, and the waters-of-a-thousand-colors flow amid unrecognizable melodies toward crystalline plateaus and prairies.*





*மேலே ஏறிச் செல்லும் பாதையில், தூய நிறங்கள் மற்றும் அறிந்திராத சத்தங்கள் நிறைந்த விநோதமான பகுதிகளை நீங்கள் காண்பீர்கள்.*

*நெருப்பு போல செயல்படும் மற்றும் தனது மாயத்தோற்றத்தினால் பயமுறுத்துவது போல் உள்ள தூய்மைப்படுத்துதலில் இருந்து விலகி ஓட வேண்டாம்,*

*திடுக்கிடும் பயங்கள் மற்றும் அவநம்பிக்கையை தவிர்த்திடுங்கள்.*

*கீழ்நோக்கி மற்றும் இருண்ட பகுதிகளை நோக்கி ஓட விரும்புவதை தவிர்த்திடுங்கள்.*

*நினைவுகளுடன் இணைக்கப்பட்டிருப்பதை தவிர்த்திடுங்கள்.*

*ஆத்ம சொரூபக் காட்சியை நோக்கி ஈடுபாட்டுடன் முன்னேறிச் செல்லும் தீர்மானத்துடன் அகச் சுதந்திரத்தில் நிலைத்திருக்கவும்.*

*பெரிய மலைத் தொடர்களின் உச்சிகளில் புனிதமான ஒளி உதிக்கிறது, மற்றும் அடையாளம் காண முடியாத இன்னிசைகளுக்கு மத்தியில் படிக பீடபூமிகள் மற்றும் பறந்த புல்வெளிகளில் எண்ணற்ற வண்ணங்களில் நீர் நிலைகள் பாய்கின்றன.*

*Do not fear the pressure of the light, which pushes against you with increasing strength the closer you draw to its center. Absorb it as though it were a liquid or a wind, for certainly, in it is life.*

*When you find the hidden city in the great mountain chain you must know the entrance. And you will know it in the moment your life is transformed. Its enormous walls are written in figures, are written in colors, are "sensed." In this city are kept the done and the yet-to-be-done. But for your inner eye the transparent is opaque. Yes, the walls are impenetrable for you!*

*Take the Force of the hidden city. Return to the world of dense life with your brow and your hands luminous."*





*அதன் மையத்தை நீங்கள் நெருங்கும் போது அதிகமான வலிமையுடன் உங்களை எதிர்க்கும் ஒளியின் செறிவைக் கண்டு பயப்பட வேண்டாம், அதை ஒரு திரவமாக அல்லது காற்றாக ஈர்த்துக்கொள்ளுங்கள், நிச்சயமாக அதில் உயிராற்றல் இருக்கும்.*

*பெரிய மலைத் தொடரில் மறைந்திருக்கும் ஒரு நகரத்தை நீங்கள் கண்டவுடன் அதன் நுழைவாயிலை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், அந்த கணத்தில் உங்கள் வாழ்க்கை உருமாற்றப்படும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். அதன் பெரிய சுவர்கள் வடிவங்களால், நிறங்களால் எழுதப்பட்டுள்ளன, அவை "உணரப்பட்டுள்ளன." இந்த நகரத்தில் செய்யப்பட்டவையும், செய்யப்பட வேண்டியவைகளும் உள்ளன. உங்கள் உள்ளார்ந்த பார்வைக்கு தெளிவானது மங்கலாக தெரிகிறது. ஆமாம், இச்சுவர்கள் துளைத்து செல்ல முடியாதவைகளாக இருக்கின்றன!*

*மறைந்துள்ள நகரத்தின் ஆற்றலை வெளிக்கொண்டு வரவும். உங்கள் கைகள் மற்றும் நெற்றியில் ஒளியோடு யதார்த்த வாழ்க்கைக்கு திரும்பி செல்லவும்."*

# XV. THE EXPERIENCE OF PEACE AND THE PASSAGE OF THE FORCE

1. Completely relax your body and quiet your mind. Then, imagine a transparent and luminous sphere that descends toward you until it comes to rest in your heart. In that moment you will recognize that the sphere ceases to appear as an image and transforms into a sensation within your chest.

2. Observe how the sensation of the sphere slowly expands from your heart toward the outside of your body, while your breathing becomes fuller and deeper. When the sensation reaches the limits of your body you may stop there and register the experience of internal peace. You may remain there as long as you feel is appropriate. To conclude the exercise, calm and renewed, reverse the previous expansion, until arriving, as in the beginning, at your heart, and finally releasing the sphere. This work is called the experience of peace.





# XV. அமைதியின் அனுபவம் மற்றும் சக்தியின் பாதை

1. உங்கள் உடலை முழுவதுமாக தளர்த்துங்கள் மற்றும் உங்கள் மனதை அமைதிப்படுத்துங்கள். அதன்பின் உங்களை நோக்கி வரும் தெளிவான ஒளி வட்டம் உங்கள் இதயத்திற்கு வரும் வரை அதை கற்பனை செய்து பார்க்கவும். அந்த கணம் வட்டம் ஒரு உருவம் போல் இல்லாமல் உங்கள் மார்பிற்குள் ஒரு உணர்வாகத் தோன்றுவதை நீங்கள் அறிவீர்கள்.

2. வட்டத்தின் உணர்வுகள் மெதுவாக உங்கள் இதயத்திலிருந்து உடலிற்கு வெளியே எவ்வாறு விரிவடைகிறது என்பதை கவனியுங்கள் அப்பொழுது உங்கள் சுவாசம் முழுமையாகவும் ஆழமாகவும் இருக்கும். உணர்வுகள் உங்கள் உடலின் எல்லையை அடையும் போது, நீங்கள் அங்கு நிறுத்தி, உள்ளார்ந்த அமைதியின் அனுபவத்தை பதிவு செய்யலாம். அது சரியானதுதான் என உணரும் வரை நீங்கள் அங்கேயே இருக்கலாம். அமைதியாக மீண்டும் தொடர்ந்து இந்த பயிற்சியை முடிக்க, உங்கள் இருதயம் தொடக்கத்தில் இருந்தது போன்ற நிலைக்கு வரும் வரை முந்தைய விரிவாக்கத்தை தலைகீழாக செய்து இறுதியாக வட்டத்தை விடுவிக்கவும். இச்செயல் அமைதியின் அனுபவம் என அழைக்கப்படுகிறது.

3. Should you instead wish to experience the passage of the Force, you must increase the expansion rather than reversing it, allowing your emotions and your whole being to follow along. Do not try to pay attention to your breathing; let it act by itself while you follow the expansion outward from your body.

4. Let me repeat: Your attention at such moments must be on the sensation of the expanding sphere. If you are unable to achieve this, it is advisable that you stop and try again another time. In any case, even if you do not produce the passage of the Force you will be able to experience an interesting sensation of peace.

5. If, however, you go further, you will begin to experience the passage of the Force. The sensations from your hands and other areas of your body will have a different tone than usual. Later you may notice increasing undulations, and in a short while vivid images and powerful emotions may arise. Allow the passage to take place...





3. அதற்கு பதிலாக நீங்கள் சக்தியின் செயல்பாட்டை உணர விரும்பினால், அதை தலைகீழாக செய்யாமல் விரிவாக்கத்தை அதிகரிக்கவும், உங்கள் உணர்வுகளையும், உடல் முழுவதையும் அதை பின்பற்ற அனுமதியுங்கள். உங்கள் சுவாசத்தில் கவனம் செலுத்தாதீர்கள். உங்கள் உடலில் வெளிப்புறமாக விரிவாக்கம் நடைபெறும் அது சுயமாகவே செயல்படட்டும்.

4. நான் மறுபடியும் சொல்கிறேன்: இதுபோன்ற தருணங்களில் உங்கள் கவனம் விரிவடையும் வட்டத்தின் உணர்வுகளில் இருக்க வேண்டும். இதை நீங்கள் அடைய முடியவில்லை என்றால், நீங்கள் அதை நிறுத்திவிட்டு மற்றொரு முறை மீண்டும் முயற்சிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. எப்படி ஆயினும் உங்களால் சக்தியின் செயல்பாட்டை உருவாக்க முடியவில்லை என்றாலும், உங்களால் அமைதியின் சுவரஸ்யமான உணர்வை அனுபவிக்க முடியும்.

5. இருப்பினும், நீங்கள் மேலும் தொடர்ந்து சென்றால், சக்தியின் செயல்பாட்டை அனுபவிக்கத் தொடங்குவீர்கள். உங்கள் கைகள் மற்றும் உங்கள் உடலின் பிற பாகங்களில் உள்ள உணர்வுகள் வழக்கத்தை விட வேறுபட்டிருக்கும். பின்னர் மனஅலைகள் அதிகரிப்பதை நீங்கள்

6. Upon receiving the Force, you will, depending upon your habitual mode of representation, perceive the light or strange sounds. In any case, what is important is that you experience an amplification of consciousness, among whose indicators are a greater lucidity and a disposition to understand what is taking place.

7. If this singular state has not faded with the passage of time, you can bring it to an end whenever you wish by imagining or feeling that the sphere contracts and then leaves you in the same way it arrived in the beginning.

8. It is interesting to recognize that many altered states of consciousness have been and almost always are achieved through the use of mechanisms similar to those described. These may be disguised, however, by strange rituals, or at times reinforced by practices involving extreme fatigue, unbridled motor activity, repetition, and postures that alter the breathing and distort the general sensation of the intrabody. In this domain you should also recognize hypnosis, mediumistic





கவனிக்கலாம், சிறிது நேரத்தில் உயிர்ப்புள்ள உருவங்களும் சக்திவாய்ந்த உணர்ச்சிகளும் தோன்றலாம். இந்த செயல்பாடு நடைபெற அனுமதியுங்கள்.

6. சக்தியை பெறுவதன் மூலம், உங்கள் பழக்க வழக்கத்தை பொறுத்து நீங்கள் ஒளியை அல்லது விநோதமான சத்தங்களை உணர்வீர்கள். எப்படியாயினும், நீங்கள் உணர்வு நிலையின் பெருக்கத்தை அடைவதுதான் முக்கியம், அதிக உள தெளிவும் புரிந்துகொள்ளும் தன்மையும் அதன் அறிகுறியாகும்.

7. இந்த அரியநிலை காலபோக்கில் மறையவில்லை எனில், அந்த வட்டம் சுருங்கி ஆரம்ப நிலைக்கே செல்வதைபோல் கற்பனை செய்வதன் அல்லது உணர்வதன் மூலம் எப்பொழுது வேண்டுமானலும் அதை நிறுத்திக்கொள்ளலாம்.

8. உணர்வுநிலையின் பல மாறுபட்ட நிலைகளை அடைவதற்கு இதுபோன்ற வழிகளை பின்பற்றுவதன் மூலம் அடையலாம் என அறிவது வியப்பாகவுள்ளது. இருப்பினும், இவை வித்தியாசமான சடங்குகள், நடைமுறை பழக்க வழக்கங்கள், அளவுக்கதிகமான சோர்வை உண்டாக்கும், இயக்க செயல்பாடு, திரும்பி செய்தல், சுவாசத்தை மாற்றும் நிலை, உள்ளார்ந்த

activity, and the effects of drugs, all of which, though they act through a different pathway, produce similar alterations. Characteristic of all these cases is an absence of control and a lack of awareness of what is taking place. Do not trust such manifestations, and consider them nothing more than "trances" such as those through which dabblers, the ignorant, and (according to legend) even the "saints" have passed.

9. Even if you have followed these recommendations, you may still have been unable to produce the passage of the Force. This should not become a source of concern, however. Simply take it as an indicator of a lack of internal "letting go" which may reflect excessive tensions or problems with the dynamics of the images and, in sum, a fragmentation of emotional behavior... Something that will, moreover, also be present in your daily life.





உடலின் பொது உணர்வு என பொய்யான தோற்றத்தின் மூலம் சொல்லப்படுகின்றன. இந்த பகுதியில் அறிதுயில் நிலை (ஹிப்னாஸிஸ்), ஆவி உலகத்துடன் தொடர்பு, போதை மருந்துகளின் விளைவுகள் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், இவை அனைத்தும் வெவ்வேறு வழியில் செயல்பட்டாலும் ஒரே மாற்றங்களையே உண்டாக்குகின்றன. கட்டுப்பாடின்மை மற்றும் என்ன நடக்கிறது என்பது குறித்த விழிப்புணர்வு இல்லாததால் இந்த நிகழ்வுகள் நடக்கின்றன. இதுபோன்ற வெளிப்பாடுகளை நம்ப வேண்டாம், இது "மெய் மறந்த (பரவச) நிலை" போல் தான், இதன் வழியாக பொழுதுபோக்குபவர்கள், அறியாமையில் உள்ளவர்கள் மற்றும் (புராணங்களின் படி) "துறவிகளும்" கடந்து வந்திருக்கிறார்கள்.

9. இந்த பரிந்துரைகளைப் நீங்கள் பின்பற்றியும், சக்தியின் செயல்பாட்டை நீங்கள் இன்னும் உருவாக்க முடியாமலும் இருந்திருக்கலாம். இருப்பினும், இது கவலைக்கான ஒரு காரணமாகக் கூடாது. இது உள் மனதில் "விடுவி" என்ற உணர்வு மனநிலை இல்லாத காரணத்தினை எடுத்துக்காட்டுகிறது. இது அதிகப்படியான பதட்டங்கள் அல்லது பிரச்சனைகள், எண்ணச் சிதறல்களுக்கு அன்றாட வாழ்வின் காரணிகளாக உள்ளன.

# XVI. PROJECTION OF THE FORCE

1. If you have experienced the passage of the Force, you will be able to understand how, based on similar experiences but without understanding, various peoples went on to develop rites and cults that later multiplied endlessly. Through experiences like those previously described there were some who felt that their bodies had "doubled," and the experience of the Force gave them the sensation that they could project this energy outside themselves.

2. The Force could be "projected" to others and also to objects particularly "suited" to receive and conserve it. I trust it will not be difficult for you to understand the function filled by the sacraments of various religions, as well as the significance of those sacred places and priests supposedly "charged" with the Force. When certain objects were surrounded with ceremonies and rites and worshipped with





# XVI. சக்தியை வெளிப்படுத்துதல்

1. அதே போன்ற அனுபவத்துடன் ஆனால் புரிந்து கொள்ளாமல், சக்தியின் செயல்பாட்டை நீங்கள் உணர்ந்திருந்தால், உங்களால் பல்வேறு மக்கள் எவ்வாறு சடங்குகளையும், வழிபாட்டு மரபுகளையும் உருவாக்குகிறார்கள் பிறகு அது முடிவில்லாமல் பன்மடங்கு பெருகுவதையும் புரிந்துகொள்ள முடியும். முன்பு விவரித்தது போன்ற உணர்வுகள் மூலம், தங்கள் உடல்களை 'இரட்டிப்பாக" உணர்ந்தவர்கள் சிலர் இருந்தனர் மேலும் சக்தியின் அனுபவமானது அவர்களுக்கு ஆற்றலை தங்களுக்கு வெளியே வெளிப்படுத்த முடியும் என்ற உணர்வை அளித்தது.

2. சக்தியை மற்றவர்களிடமும், அதை உள்வாங்கி சேமித்து வைக்க கூடும் "பொருத்தமான" பொருட்களிடம் "வெளிப்படுத்தலாம்". பல்வேறு மதங்களின் புனிதச் சடங்குகள் நிரம்பிய செயல்பாடு, மேலும் அந்த புனித ஸ்தலங்களின் முக்கியத்துவம் மற்றும் சக்தியினால் "திறன் பெற்ற" குருக்களை புரிந்துகொள்வது உங்களுக்கு சிரமமாக இருக்காது என்று நான் நம்புகிறேன். சில பொருட்கள் சடங்குகளாலும்

faith in temples, surely they "gave back" to the believers the energy accumulated through repeated prayer. Since fundamental internal experience is essential to understanding in these matters, attempts at understanding based, as is normally the case, solely on externals, whether cultural, geographical, historical, or traditional, reveal a limitation in our knowledge of human realities.

3. "Projecting," "charging," and "replenishing" the Force are subjects to which we will return later. For now let me say that this same mechanism continues to operate even in desacralized societies, where leaders and others imbued with prestige are surrounded by a special aura in the eyes of those who would like to see them, "touch" them, acquire a scrap of their clothing, or their possessions.

4. This occurs because all representations of the "heights" extend from eye level upward, above the normal line of sight. And the "higher-ups" are those who "possess" kindness, wisdom, and strength. There, in the "heights" above, we also find the hierarchies, the powers that





சடங்காச்சாரங்களாலும் சம்பிரதாயங்களும் சூழப்பட்டு ஆலயங்களில் வழிப்படும் போது, அப்பொருட்கள் தொடர் பிரார்த்தனையின் மூலம் சேமிக்கப்பட்ட ஆற்றலை பக்தர்களுக்கு "திரும்பக் கொடுக்கிறது". இந்த விஷயங்களை புரிந்துகொள்வதற்கு அடிப்படையான உள்ளார்ந்த அனுபவம் அவசியம் ஏனெனில், வழக்கமாக கலாச்சார, புவியியல், வரலாற்று அல்லது பாரம்பரியம் போன்றவற்றில் மனிதனுக்கு ஓரளவு அறிவு உள்ளது.

3. சக்தியை "வெளிப்படுத்துதல்," "ஊட்டமளித்தல்" மற்றும் "மீண்டும் நிரப்புதல்" ஆகியவை குறித்து பின்னர் அறிந்துகொள்வோம். தலைவர்கள் மற்றும் செல்வாக்கு உள்ளவர்களை பார்க்க, "தொட" மற்றும் அவர்களுடைய துணி அல்லது உடமைகளின் ஒரு சிறு பகுதியை பெற விரும்புவர்களின் கண்களில் இவர்கள் ஒரு சிறப்பு ஒளி வட்டத்தால் சூழப்பட்டவர்களாக தெரிகிறார்கள். மதமற்ற சமுதாயங்களிலும் இதே முறைதான் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது என்பதை மட்டும் இப்போது கூறுகிறேன்.

4. வழக்கமான பார்வைக் கோட்டிற்கு மேலே தான் "உயரங்கள்" வர்ணிக்கப்படுவதினால் இது ஏற்படுகிறது. அன்பு, ஞானம் மற்றும் வலிமை ஆகியவற்றை உடையவர்கள் "உயர்ந்தவர்கள்"

be, and the flags of State. And we, ordinary mortals, must at all costs "ascend" the social ladder in order to draw closer to power. What a sorry state we are in, still governed by these mechanisms that coincide with our internal representation, in which our heads are in the "heights" and our feet stuck on the ground. What an unhappy state we are in, when we believe in these things, and believe in them because they have their own "reality" in our internal representation. What a sorry state we are in, when our external look is nothing but an unacknowledged projection of the internal.





ஆவார்கள். மேலேயுள்ள "உயரங்களில்", குரு வம்சங்கள், சக்திகள் மற்றும் நாட்டின் கொடிகளை நாம் காண்கிறோம். மேலும், சாதாரண மனிதர்கள் சமூக அந்தஸ்த்தைப் பெற துடிப்புடன் அதிகாரத்தை நோக்கி முன்னேறுகின்றனர் என்ன ஒரு வருந்தத்தக்க நிலையில் நாம் உள்ளோம். நமது தலைகள் "உயரத்திலும்" நமது கால்கள் பூமியிலும் சிக்கியுள்ளது. இது நமது உள்ளார்ந்த எண்ணத்தை பிரதிபலிக்கிறது. என்ன ஒரு சோக நிலையில் நாம் உள்ளோம். நாம் இதை நம்புகின்றோம் ஏனெனில் உள் உணர்வுகளில் இதற்கான யதார்த்தம் உள்ளது என்ன ஒரு வருந்தத்தக்க நிலையில் நாம் உள்ளோம் நம் உள் மனத்தின் தோற்றத்தையே வெளியுலகில் காண்கின்றோம்.

# XVII. LOSS AND REPRESSION OF THE FORCE

1. The greatest discharges of energy occur through uncontrolled acts, including unbridled imagination, unchecked curiosity, immoderate small talk, excessive sexuality, and exaggerated perception (looking, listening, tasting, and so on in an aimless and excessive manner). But you should also recognize that many act in these ways because it allows them to discharge tensions that would otherwise be painful. All things considered, and given the function served by these discharges, I am sure you will agree with me that it is not reasonable to repress them but rather to give order to them.

2. As for sexuality, you must interpret this correctly: This function must not be repressed because that will only cause torment and internal contradiction. Sexuality directs itself toward and concludes in the act itself, and it is not useful that it continues affecting the





# XVII. சக்தியின் இழப்பு மற்றும் ஒடுக்குதல்

1. தடையற்ற கற்பனை, கட்டுப்பாடிலில்லாத ஆர்வம், அளவுக்கு மீறிய தேவையற்ற பேச்சுகள், அளவுக்கதிகமான பாலுணர்வு மற்றும் மிகைப்படுத்தப்பட்ட புலனுணர்வு - பார்த்தல், கேட்டல், சுவைத்தல் போன்ற குறிக்கோளில்லாத கட்டுப்பாடற்ற செயல்கள் மூலம் பெருமளவிலான ஆற்றல் வெளியேறுகின்றது. மன உளைச்சலை ஏற்படுத்தும், பதட்டங்களை குறைக்க இது அவர்களுக்கு உதவுகிறது ஆதலால் பலர் இந்த வழிகளை பின்பற்றுகிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், அனைத்தையும் கருத்தில்கொண்டு, இந்த வெளியேற்றங்களின் செயல்பாடுகள் பற்றி குறிப்பிட்டபின், அவற்றை ஒடுக்குவது நியாயமானது அல்ல ஆனால் அதற்கு பதிலாக அதற்கு கட்டளையிடலாம் என்பதற்கு என்னோடு ஒத்துப் போவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

2. பாலுணர்வைப் பொறுத்தவரை, நீங்கள் இதை சரியாக புரிந்துகொள்ள வேண்டும்: இந்த செயல்பாட்டில் அடக்குமுறை கூடாது, ஏனென்றால் அது மனவேதனையும், உள்ளார்ந்த

imagination, or is expressed as an obsessive search for a new object of possession.

3. The control of sex by a particular social or religious "morality" has served purposes that had nothing to do with evolution, but the contrary.

4. In repressed societies, the Force (the energy of the representation of the sensation of the intrabody) turned back toward the crepuscular. In those societies, cases increased of the "possessed," of "witches," of the sacrilegious, and of criminals of all kinds who rejoiced in suffering and the destruction of life and beauty. In some tribes and civilizations the criminals were to be found among both the accusers and the accused. In other cases all that was science and progress was persecuted because it opposed the irrational, the crepuscular, and the repressed.





முரண்பாட்டையும் மட்டுமே ஏற்படுத்தும். பாலுணர்வு தன்னை தானே வழிநடத்துகிறது பின்னர் தானாகவே முடிவடைகிறது, மேலும் இது கற்பனையை தொடர்ந்து பாதிப்பதால் இது பயனற்றது அல்லது இது ஒரு புதிய பொருளை அடைவதற்கான ஒரு தீவிர தேடலாக வெளிப்படுகிறது.

3. ஒரு குறிப்பிட்ட சமூக அல்லது மத "நெறிமுறை" மூலம் பாலுணர்வை கட்டுப்படுத்துவதின் நோக்கம் பரிணாமத்துடன் சம்பந்தப்பட்டதல்ல, ஆனால் அதற்கு எதிர்மறையானது.

4. ஒடுக்கப்பட்ட சமூகங்களில், சக்தியானது (உள்ளார்ந்த உணர்வை குறிக்கும் ஆற்றல்) பிற்போக்கு எண்ணத்தை நோக்கி திரும்பியது. அந்த சமூகங்களில், "பேய் பிடித்தவர்கள்," "சூனியக்காரர்கள்," "மத நிந்தனையாளர்கள்" வாழ்க்கை மற்றும் அழகின் அழிவில், துயரத்தில் மகிழ்ச்சியடையும் அனைத்து குற்றவாளிகளும் பெருகிவிட்டனர். சில பழங்குடிகள் மற்றும் நாகரிக உலகில், குற்றம் சாட்டுபவர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மத்தியலும் குற்றவாளிகள் காணப்பட்டனர். பிற சந்தர்ப்பங்களில், அறிவியல் மற்றும் முன்னேற்றம் அனைத்தும் ஒடுக்கப்பட்டன, ஏனென்றால் அது பகுத்தறிவின்மை, பிற்போக்குத்தனம் மற்றும் அடக்குமுறையை எதிர்த்தது.

5. The repression of sex still exists among certain so-called “primitive peoples,” just as it does in other so-called “advanced civilizations.” It is evident that although the origins of these two situations may differ, both are marked by great destructiveness.

6. If you ask me to explain further, I will tell you that in reality sex is sacred, and it is the center from which all life and creativity springs, just as it is from there that all destruction arises when issues about its functioning are not resolved.

7. Never believe the lies of the poisoners of life when they refer to sex as despicable. On the contrary, in it is beauty, and not in vain is it related to the best feelings of love.

8. Be careful, then, and consider sex a great wonder, which must be treated with care, without turning it into a source of contradiction or disintegration of vital energy.





5. பிற “வளர்ச்சி பெற்ற நாகரிக உலகில்” நடப்பது போலவே, “பழங்கால மக்களின்” மத்தியில் இன்னும் பாலியல் அடக்குமுறை இருந்து வருகிறது. இந்த இரண்டு சூழ்நிலைகளின் தோற்றங்களும் வேறுபட்டதாக இருந்தாலும், இரண்டும் பெரும் அழிவுகளால் குறிப்பிடப்படுகின்றன என்பது தெளிவாகிறது.

6. மேலும் விவரமாக கூறுங்கள் என நீங்கள் என்னிடம் கேட்டுக் கொண்டால், பாலுணர்வு என்பது உண்மையில் புனிதமானது என்றும் அனைத்து உயிர்களும் படைப்புகளும் உருவாகும் மையமாக இருக்கிறது என்றும் நான் உங்களிடம் சொல்வேன். அது போலவே அதன் செயல்பாடு குறித்த பிரச்சனைகள் தீர்க்கப்படாத போது அங்கிருந்துதான் அனைத்து அழிவுகளும் உருவாகின்றன.

7. பாலுணர்வை வெறுக்கத்தக்கதாக குறிப்பிடும் விஷமிகளின் பொய்களை நீங்கள் ஒருபோதும் நம்ப வேண்டாம். மாறாக, அதில் அழகு இருக்கிறது, அது வீண் காரியம் அல்ல மேலும் அது அன்பின் சிறந்த உணர்வாக இருக்கிறது.

8. அப்படியானால், கவனமாக இருங்கள் மற்றும் பாலுணர்வை ஒரு சிறந்த அற்புதமாக கருதுங்கள், முரண்பாடு அல்லது முக்கிய ஆற்றல் சிதையாமல் இதை கவனமாக கையாள வேண்டும்.

# XVIII. ACTION AND REACTION OF THE FORCE

*Earlier I explained to you: "Whenever you find great strength, joy, and kindness in your heart, or when you feel free and without contradictions, immediately be internally thankful."*

1. "To be thankful" means to concentrate these positive moods and to associate them with an image, with a representation. If you have previously linked positive states in this way, you can, upon finding yourself in a difficult situation, evoke that representation, and along with it will arise the positive quality that accompanied it earlier. Furthermore, since this mental "charge" has been increased through previous repetitions, it is capable of displacing the negative emotions that certain situations can impose.



# XVIII. சக்தியின் செயல்பாடு மற்றும் எதிர்வினை

*நான் முன்பே உங்களுக்கு விளக்கியபடி: "எப்பொழுதாகிலும் உங்கள் உள்உணர்வில் மிகுந்த பலம், மகிழ்ச்சி மற்றும் இரக்கம் ஆகியவற்றை நீங்கள் காணும்போதெல்லாம் அல்லது நீங்கள் முரண்பாடு இல்லாமால் முழுநிறைவாக உணரும் போது, உடனடியாக நன்றியை உணருங்கள்."*

1. "நன்றியுணர்வு" என்றால் இந்த நேர்மறையான மனநிலையின் கவனம் உருவமைப்பில் இருக்க வேண்டும் மற்றும் உருவமைப்புடன் அவற்றை தொடர்புப்படுத்த வேண்டும். இந்த வழியில் நேர்மறையான நிலையுடன் நீங்கள் முன்பு இணைந்திருந்தால், நீங்கள் கடினமான சூழ்நிலையில் இருக்கும்போது அந்த பாவிப்பை வெளிக்கொணருங்கள், மேலும் அதனுடன் சேர்ந்து முன்பு ஏற்பட்ட நேர்மறையான மனநிலைத் தோன்றும். மேலும் முந்தைய மறுபயன்பாடுகளினால் இந்த உள்ஆற்றல் அதிகரித்துள்ளது, இதனால் சில சூழ்நிலைகளில் உருவாகக்கூடிய எதிர்மறையான உணர்வுகளை மாற்றுவது சாத்தியமாகும்.

2. Thus, whatever you ask for will return from within you amplified in benefit as long as you have accumulated within yourself numerous positive states. By now it should be unnecessary to repeat that, believing they would respond to prayers and supplication, this mechanism has long been used (though in confused ways) to "charge" external objects or persons, as well as internal entities that have been "projected."



2. எனவே, உங்களுக்குள் பல நேர்மறையான நிலைகள் இருக்கும் வரை, நீங்கள் கேட்பதெல்லாம் உங்களின் உள்ளிருந்தே பலனாக பெருகும். பிரார்த்தனைகளுக்கும் வேண்டுதல்களுக்கும் அவை பதிலளிக்கும் என்பதை நம்பி, அவற்றை மறுபடியும் செய்வது இப்போது தேவையற்றதாகும். வெளிப்புற பொருட்கள் அல்லது நபர்கள், அத்துடன் வெளிப்படுத்தப்பட்ட உருபொருள்களை "சக்தியூட்ட" (குழப்பமான வழிமுறைகளாக இருந்தாலும்) இந்த முறை நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

# XIX. THE INTERNAL STATES

*You must now gain sufficient insight into the various internal states you may find yourself in throughout the course of your life, and particularly in the course of your evolutionary work. I have no way to describe these states except by using images, in this case allegorical ones. These seem to me to have the virtue of "visually" concentrating complex states and moods. The unusual approach of linking these states to one another as if they were distinct moments in a single process introduces a departure from the typically fragmented descriptions to which we have become accustomed from those who normally deal with such things.*

1. As I mentioned earlier, in the first state, known as Diffuse Vitality, non-meaning prevails. Here, everything is oriented by physical needs, though these are often confused with contradictory images and desires. Here, both motives and all that is





# XIX. அக நிலைகள்

*இப்போது நீங்கள் உங்கள் வாழ்க்கையில் காணப்போகின்ற பல்வேறு அக நிலைகள் பற்றி போதுமான அறிவைப் பெற வேண்டும், குறிப்பாக உங்கள் பரிணாமப் போக்கில் காணக் கூடியவைப் பற்றி அறியவேண்டும். இந்த நிலைகளை உருவகப் படுத்தாமல் வேறெந்த வழியிலும் என்னால் விவரிக்க இயலாது. மனோபாவங்கள், மனநிலைகளை உருவகங்களாக பார்ப்பது தான் சரி என எனக்கு தோன்றுகிறது. இந்த நிலைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய செயல்பாட்டின் தொடர்ச்சியே. அசாதாரணமான அணுகுமுறையினால் வழக்கமாக இதை விவரித்து வந்தவர்களின் தொடர்பற்ற விளக்கங்களிலிருந்து மாறுபட்டது.*

1. நான் முன்பு குறிப்பிட்டது போல, முதல் நிலையில், அர்த்தமற்ற நிலை பரவுகிறது, இது சிதலமடைந்த உயிர்நிலை என அறியப்படும். இங்கே, அனைத்துமே சரீர ரீதியான தேவைகளையே சார்ந்திருக்கின்றன, இவை பெரும்பாலும் முரண்பாடான உருவகங்கள் மற்றும் ஆசைகளால் குழப்பப்படுகின்றன. இங்கே நோக்கங்களும், செய்தவைகளும் மூடி

done are shrouded in darkness. In this state you simply vegetate, lost among changing forms. From this point you can evolve only by following one of two paths: the way of Death or the way of Mutation.

2. The path of Death puts you in the presence of a dark and chaotic landscape. The ancients knew this passage and almost always located it "underground" or in the abysmal depths. There are those who visited this kingdom, to later "resurrect" in luminous levels. Understand well that "below" Death lies Diffuse Vitality. Perhaps the human mind relates mortal disintegration to subsequent phenomena of transformation; perhaps it associates this diffuse movement with what takes place before birth. If your direction is that of ascent, "Death" signifies a break with your former stage. By taking the path of Death you ascend to another state.





மறைக்கப்படுகின்றன. இந்த நிலையில் நீங்கள் செயலற்ற வாழ்க்கையை நடத்துகிறீர்கள், மாற்றங்களில் ஸ்தம்பித்து காணாமல் போய்விடுகிறீர்கள். இந்த நிலையிலிருந்து வெளியேற நீங்கள் மரண பாதை அல்லது மாற்றத்திற்கான பாதையில் ஏதேனும் ஒன்றை மட்டுமே தொடர வேண்டும்.

2. மரண பாதையானது உங்களை ஒரு இருண்ட மற்றும் குழப்பமான இடத்திற்கு கொண்டு செல்கிறது. இந்த பாதை பற்றி முன்னோர்கள் அறிந்திருந்தார்கள் மேலும் இது கிழூலகத்திலும் பாதாளத்திலும் அமைந்திருந்தது. இவ்விடத்திற்கு சென்றவர்கள் பிற்காலத்தில் ஒளி நிலைகளில் "உயிர்த்தெழுகிறார்கள்". மரணத்தின் கீழ் சிதலமடைந்த உயிர்நிலை உள்ளது என்பதை நன்கு புரிந்து கொள்ளுங்கள். மனித எண்ணத்தின் மாற்றத்திற்கான நிகழ்வுகளை சிதலமடைவதோடு தொடர்புப்படுத்தலாம். ஒருவேளை இந்த செறிவற்ற ஆற்றலை பிறப்புக்கு முன் நடக்கும் நிகழ்வோடும் தொடர்புப்படுத்தலாம்.
உங்கள் நோக்கம் மேல் நோக்கிச் செல்வதாக இருந்தால், "இறப்பு" உங்கள் முந்தைய நிலையில் உள்ள ஒரு இடைவெளியை குறிப்பிடுகிறது. மரணத்தின் பாதையை தேர்ந்தெடுப்பதன் மூலம், நீங்கள் மேல் நிலைக்கு செல்கிறீர்கள்.

3. Arriving here you find yourself at the refuge of Regression. Two ways open from here: One is the road of Repentance; the other, which you used for the ascent, is the road of Death. If you take the first road it is because your decision tends to break with your past life. If you go back along the road of Death you fall again into the depths, with the sensation of being trapped in a closed circle.

4. Earlier I told you that there is another path you might take to escape from the abyss of Vitality; it is the path of Mutation. If you choose this road it is because you wish to emerge from your unhappy state, but are unwilling to abandon some of its apparent benefits. It is, then, a false road known as the "Twisted Hand." Many are the monsters who have emerged from the depths through this tortuous passageway. They have wanted to storm the heavens without abandoning the hells, and consequently have projected infinite contradiction into the middle world.

5. Let us suppose that by ascending from the kingdom of Death and through your





3. நீங்கள் இங்கே வருவதன் மூலம் பின்னோக்கி செல்லவேண்டாம் என்று உணர்வீர்கள். இரண்டு பதைகள் இங்கே திறக்கின்றன: ஒன்று மனம் மாறுவதற்கான பாதை மற்றொன்று நீங்கள் மேலேறி வந்த மரணத்தின் பாதை. முதல் பாதையை நீங்கள் தேர்ந்தெடுத்தால், நீங்கள் உங்கள் கடந்தகால வாழ்க்கையிலிருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளீர்கள். மரணப் பாதையில் நீங்கள் திரும்பிச் சென்றால், மீண்டும் விழுந்து ஒரு சுழற்சியில் சிக்கியது போல உணர்வீர்கள்.

4. திடமற்ற ஆற்றலிலிருந்து வெளியேறுவதற்கான மற்றொரு பாதை பற்றி நான் முன்பு கூறினேன்; அது மாற்றத்தின் பாதையாகும். உங்கள் மகிழ்ச்சியற்ற நிலையிலிருந்து நீங்கள் வெளிவர விரும்புவதனால், இந்த பாதை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள், அதன் நன்மைகள் சிலவற்றை நீங்கள் கைவிட விரும்பவில்லை. எனவே, இது "கட்டிப்போட்ட கைகள்" எனும் ஒரு தவறான பாதை. இந்த கடினமான பாதை வழியாக மேலேறி வருபவர்கள் பலர் அரக்கர்களாக இருக்கின்றனர். அவர்கள் நரகத்தை கைவிடாமல் சொர்கத்தை தாக்க விரும்புகின்றனர், இதன் விளைவாக உலகத்தில் எல்லையற்ற முரண்பாடுகள் உருவாகியுள்ளன.

5. மரணத்திலிருந்தும் உங்கள் உணர்வுபூர்வமான மன மாற்றத்திலிருந்தும் மேல் நோக்கி வந்து நீங்கள் இப்பொழுது விருப்பமான வசிப்பிடத்தை அடைந்துள்ளீர்கள் என நினைத்துகொள்வோம்.

conscious Repentance you have now reached the dwelling of Tendency. Two narrow supports, Conservation and Frustration, sustain your dwelling. Conservation is false and unstable; walking along this path you delude yourself with the idea of permanence, but in reality you descend rapidly. Should you take the path of Frustration your ascent is arduous, but this path is the only-one-not-false.

6. After failure upon failure you can reach the next resting place, called the "dwelling of deviation." Take care in choosing between the two roads now before you. Either you take the road of Resolution, which carries you to Generation, or you take that of Resentment, which causes you to descend once more toward Regression. Here you face another dilemma: Either you choose the labyrinth of conscious life (and you do so with Resolution) or you return, resentfully, to your previous life. There are many who, at this point, unable to surpass themselves, cut off their own possibilities.





இரண்டு குறுகிய நோக்கங்கள், பாதுகாப்பு, தோல்வி இங்கே இருக்கின்றன. பாதுகாப்பு என்பது தவறானதாகவும் நிலையற்றதாகவும் இருக்கிறது. இந்த பாதையை தொடர்ந்தால் நிலையாக இருக்கின்றீர்கள் என்ற மாயை தோன்றும் ஆனால் உண்மையில் நீங்கள் வேகமாக கீழ்நோக்கி இறங்குகிறீர்கள். தோல்வியின் பாதையை தேர்ந்தெடுத்தால், நீங்கள் மேல் ஏறிச் செல்வது கடினமானதாக இருக்கும் ஆனால் இதுவே சரியான பாதையாகும்.

6. பல தோல்விகளுக்கு பிறகு, "விலகலின் இருப்பிடம்" என அழைக்கப்படும் அடுத்த பாதுகாப்பான நிலையை நீங்கள் அடையலாம். இப்போது உங்களுக்கு முன் உள்ள இரண்டு பாதைகளை தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருங்கள். நீங்கள் உறுதியான பாதையை தேர்ந்தெடுத்தால் அது உருவாக்கத்திற்கான ஊக்கத்தை தரும் அல்லது கீழ் நோக்கி இறங்கும் பாதையை நீங்கள் தேர்ந்தெடுத்தால் அது உங்களுக்கு மனகசப்பைத் தரும். இங்கே நீங்கள் மற்றொரு குழப்பத்தை எதிர்கொள்கிறீர்கள்: உறுதியோடு உணர்வுப்பூர்வமான வாழ்கையின் சிக்கலான பாதையை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் அல்லது மனக்கசப்பான உங்களுடைய முந்தைய வாழ்கைக்கு திரும்ப வேண்டும். தங்கள் வாய்ப்புகளை தவற விட்டு இந்த இடத்தை தாண்ட முடியாமல் இந்த நிலையிலேயே பலர் இருக்கின்றனர்.

7. But you who have ascended with Resolution now find yourself at the dwelling known as Generation. Here you face three doors: one called the Fall, another known as Intent, and the third called Degradation. The Fall carries you directly to the depths, and only an external accident can push you toward it; it is unlikely that you would choose that door. The door of Degradation, however, carries you indirectly to the abyss as you retrace your steps in a sort of turbulent spiral in which you continually reconsider all that you have lost and all that you have sacrificed. This examination of consciousness that leads you to Degradation is surely a false examination in which you underestimate and disproportionately evaluate some of what you are comparing. You compare the effort of the ascent with those "benefits" you have left behind. But if you examine things more closely, you will see that you have not abandoned anything for the ascent, but rather for other reasons. Degradation begins, then, when you misrepresent motives that were not really related to the ascent. I ask you now: What betrays the mind? Perhaps





7. ஆனால் உறுதியுடன் மேலேறிச் சென்ற நீங்கள் உருவாக்கம் என அழைக்கப்படும் இருப்பிடத்தில் உங்களைக் காணலாம். இங்கே நீங்கள் மூன்று கதவுகளை எதிர்கொள்கிறீர்கள்: ஒன்று வீழ்ச்சி என அழைக்கப்படுகிறது, மற்றொன்று நோக்கம் என அழைக்கப்படுகிறது, மூன்றாவது சீரழிதல் என அழைக்கப்படுகிறது. வீழ்ச்சியானது உங்களை நேரடியாக ஆழத்திற்கு கொண்டு செல்கிறது, ஒரு புற விபத்து மட்டுமே இதை ஏற்படுத்தும்; நீங்கள் அந்த கதவைத் தேர்ந்தெடுப்பது சாத்தியமில்லை. சீரழிதல் என்னும் கதவு உங்களை மறைமுகமாக கொந்தளிக்கும் சுழலின் ஆழத்திற்கு கொண்டு செல்கிறது. நீங்கள் வந்த பாதையை திரும்பிப் பார்க்கும் போது, நீங்கள் இழந்தது, தியாகம் செய்தது அனைத்தையும் தொடர்ந்து நினைவுபடுத்தும். உங்களை அவமதிப்பிற்கு வழிநடத்தும் உணர்வுப் பரிசோதனை என்பது, இது ஒரு தவறான பரிசோதனையாகும், இதில் நீங்கள் ஒப்பிடும் சிலவற்றை குறைவாக அல்லது தவறாக மதிப்பிடுகிறீர்கள். நீங்கள் விட்டுச்சென்ற அந்த "நன்மைகளுடன்" மேலேறிச் செல்லும் முயற்சியை ஒப்பிடுகிறீர்கள். ஆனால் நீங்கள் கவனமாக ஆய்வு செய்தால் நீங்கள் மேலேறி வருவதற்காக அல்ல மற்ற காரணங்களுக்காக நீங்கள் அனைத்தையும் தியாகம் செய்தீர்கள். மேலேறிச் செல்வதுடன் தொடர்பற்ற விஷ யங்களை தொடர்புவுள்ளதாக எடுத்துக்கொள்ளும் போது அவமதிப்பு உண்டாகிறது. நான் இப்போது உங்களிடம் கேட்கிறேன்: மனதை தவறாக வழிநடத்துவது எது? ஒருவேளை அது

it is the false motives of initial enthusiasm? Perhaps it is the difficulty of the undertaking? Perhaps it is the false memories of sacrifices that never were, or that were made for other reasons? Saying this I ask you now: Some time ago your house burned down, and because it did you chose the ascent. Or do you now think that because of this ascent, your house burned down? Have you perhaps noticed what has happened to the other houses around you? There is no doubt that you must choose the middle door, that of Intent.

8. Climbing the stairway of Intent you will reach an unstable dome. From there, take the narrow, winding passageway known as Volubility until you reach a vast and empty space like a platform, which bears the name Open-Space-of-the-Energy.

9. In that open space you may be frightened by the immense, deserted landscape and the terrifying silence of this night, transfigured by enormous and immobile stars. There, directly over your head, you will see set in the





ஆரம்பகட்ட ஆர்வத்தின் தவறான நோக்கங்களா? ஒருவேளை அது செயல்படுத்துவதற்கு சிரமமாக இருக்குமோ? ஒருவேளை அது ஒருபோதும் இல்லாத அல்லது பிற காரணங்களுக்காக செய்யப்பட்ட தியாகங்களின் பொய்யான நினைவுகளாக இருக்குமோ? இதைக் கூறி நான் இப்போது உங்களிடம் கேட்கிறேன்: சற்று நேரத்திற்கு முன்பு உங்கள் வீடு தீப்பற்றி எரிந்து விட்டது, அதனால் நீங்கள் மேலேறி வருவதை தேர்ந்தெடுத்தீர்கள். அல்லது இந்த ஏற்றத்தின் காரணமாக உங்கள் வீடு எரிந்து விட்டது என நீங்கள் இன்னும் நினைக்கிறீர்களா? அல்லது ஒருவேளை உங்களைச் சுற்றியுள்ள மற்ற வீடுகள் என்ன ஆனது என கவனித்தீர்களா? சந்தேகம் இல்லாமல் நீங்கள் நோக்கம் என்ற நடுவில் உள்ள கதவை தேர்ந்தெடுக்க வேண்டும்.

8. நோக்கம் என்ற வழியில் மேலேறிச் சென்றால் ஒரு நிலையற்ற விதானத்தை நீங்கள் அடைவீர்கள். அங்கிருந்து ஒரு குறுகி, வளைந்த உறுதியற்ற பாதையை கடந்து சென்றால் ஒரு பரந்த காலியான தளத்தை நீங்கள் அடைவீர்கள், இவ்விடம் ஆற்றலின் திறந்த வெளி என அழைக்கப்படும்.

9. அந்த திறந்தவெளியில், பரந்த ஆள் நடமாட்டமில்லாத இடம் மற்றும் எண்ணற்ற அசையாத நட்சத்திர இரவின் மயான அமைதியினால் நீங்கள் பயந்திருக்கலாம். அங்கே, உங்கள் தலைக்கு மேலே, வான மண்டலத்தில்

firmament the suggestive form of the Black Moon, a strange, eclipsed moon located exactly opposite the Sun. Here you must await the dawn patiently and with faith, for nothing bad can happen if you remain calm.

10. You may, upon finding yourself in this situation, want to arrange an immediate way out of there. However, should you try to leave instead of prudently awaiting the day, you could end up blindly groping your way anywhere. Remember that all movement here (in the darkness) is false and is generically called Improvisation. If, forgetting what I tell you now, you begin to improvise movements, be certain that you will be dragged by a whirlwind down paths and past dwellings to the darkest depths of Dissolution.

11. How difficult it is to comprehend that the internal states are linked one to another! If you could see what inflexible logic the consciousness has, you would realize that those who blindly improvise in this situation inevitably begin to degrade themselves and





கருநிலா போன்ற வடிவத்துடன் சூரியனுக்கு நேர் எதிரே அமைந்துள்ள ஒரு விநோதமான சந்திர கிரகணை நீங்கள் பார்க்கலாம். இங்கே விடிவதற்காக நீங்கள் நம்பிக்கையுடன் அமைதியாக காத்திருக்க வேண்டும், நீங்கள் அமைதியாக இருப்பதனால் உங்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது.

10. இந்த சூழ்நிலையில் இருந்து நீங்கள் உடனடியாக வெளியேற முயற்சிக்கலாம். இருப்பினும், விடியலுக்காக விவேகத்துடன் காத்திருப்பதற்குப் பதிலாக நீங்கள் வெளியேற முயற்சித்தால், நீங்கள் வழியை தவறவிட்டு விடுவீர்கள். உங்களது அனைத்து முயற்சிகளும் இங்கு (இருளில்) தவறாகும், இது பொதுவாக இட்டுக்கட்டு என அழைக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவும். நான் இப்போது உங்களிடம் சொல்வதை மறந்திருந்தால், நீங்கள் இட்டுகட்ட முனைவீர்கள். சூறாவளியின் சுழல் காற்றினால் பழைய இருப்பிடங்கள் வழியாக இருண்ட முடிவில்லா பாதாளத்திற்க்கு இழுத்து செல்லப்படுவீர்கள்.

11. அக நிலைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருக்கின்றன என்பதை கிரகித்துக் கொள்வது எவ்வளவு கடினமாக இருக்கிறது! உள்உணர்வுகள் எவ்விதமான பிடிவாதத்தை கொண்டிருக்கிறது என்பதை உணர்வீர்களானால் இந்நிலையில் கண்மூடித்தனமாக இட்டுக்கட்டுபவர்கள் தன்னையும்

others. Then, feelings of Frustration arise in them, and later they fall into Resentment and finally into Death, forgetting all that they had at one moment managed to perceive.

12. If in that open space you manage to reach the day, the radiant Sun will rise before your eyes, illuminating reality for the first time. Then you will see that in everything that exists there lives a Plan.

13. It is unlikely that you will fall from here unless you should voluntarily choose to descend to obscure regions in order to carry the light into the darkness.
